# உமா பதிப்பகத்தின் உலகத் தமிழ்க் களஞ்சியம்

# சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டது!



மலேசியப் புத்தக வெளியீட்டாளர்களின் கூட்டமைப்பு (MABOPA) அண்மையில் மலேசியப் புத்தக விருதளிப்பு இரண்டாம் ஆண்டு விழாவை நடத்தியது. இவ்விழா, 31.05.2023ஆம் நாளன்று, கோலாலம்பூர் உலக வர்த்தக மையம் (PWTC) கோலாலம்பூர் அனைத்துலகப் புத்தகக் கண்காட்சியில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் உமா பதிப்பகத்தின் சிறப்பு வெளியீடான 'உலகத் தமிழ்க் களஞ்சியம்' தமிழ்மொழி பிரிவுக்கான சிறந்த புத்தகமாகத் தெரிவு செய்யப்பட்டது. மலேசியப் புத்தக விருதின் பரிசளிப்பு விழாவில் தமிழ்மொழிப் பிரிவுக்கு விருது வழங்குவது இதுவே முதல் முறையாகும். இவ்விருதினை உமா பதிப்பகத்தின் நிருவாக இயக்குநர் திரு. சோ. சிவபாலன் பெற்றுக் கொண்டார். மலேசியப் புத்தக விருது என்பது மலேசியாவில் வெளியிடப்பட்ட அச்சு அல்லது மின்னியல் படைப்புகளின் உயர் தரம், கட்டமைப்பு, வெளியீடு ஆகியவற்றை மதிப்பீட்டு அங்கீகாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




இவ்விருதுக்காக மொத்தம் 293 படைப்புகள் பரிந்துரைக்கப்பட்டன. அவற்றுள் 78 புத்தகங்கள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டன. பின்னர், 14 பிரிவுகளுக்கான சிறந்த புத்தகங்களைத் தெரிவு செய்தனர். மலேசியப் புத்தக வெளியீட்டாளர்கள் கூட்டமைப்பின் (MABOPA) பதிவுசெய்யப்பட்ட பதிப்பக நிறுவனத்தினர் மட்டுமே இணையம் வழி இவ்விருதுக்கான வெற்றியாளர்களைத் தெரிவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ்க் களஞ்சியம் 2018ஆம் ஆண்டு சென்னை அனைத்துலகப் புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்டது. உலகம் முழுவதும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட்ட தமிழர்களின் பங்களிப்பு இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இது மொத்தம் மூன்று தொகுதிகளைக் கொண்டுள்ளது. இத்தொகுதிகள் அனைத்தும் 16,000க்கும் மேற்பட்ட செய்திகளுடன் 2,140 பக்கங்களைக் கொண்டுள்ளன.

உமா பதிப்பகத்தின் நிறுவனர் டத்தோ சோதிநாதன் அவர்களின் தலைமையில் இப்புத்தகம் உருவாக்கம் கண்டது. பல துறை அறிஞர்களுடன் இணைந்து 12 ஆண்டுகள் உழைப்பில் உருவானது. பெரும் செலவில் தயாரிக்கப்பட்டது. இதுபோன்ற சிறந்த (தமிழ்) நூல்களுக்கு விருதுகள் வழங்கியிருப்பது என்பது தமிழுக்கும் தமிழர்களுக்கும் மலேசியா அளித்துள்ள மிகப் பெரிய அங்கீகாரமாகும்.



உலகத் தமிழ்க் களஞ்சியம்

# உமா பதிப்பகத்தின் உலகத் தமிழ்க் களஞ்சியம்

## சிறந்த நூலாகத் தேர்வு



அனைத்துலகப் புத்தகக் கண்காட்சியில் விருதுகள் வென்றவர்கள்.

கோலாலம்பூர், ஜூலை 4-

மலேசியப் புத்தக வெளியீட்டாளர்களின் கூட்டமைப்பு அண்மையில் இரண்டாம் ஆண்டு மலேசியப் புத்தக விருதளிப்பு விழாவை நடத்தியது. கடந்த 31.5.2023ஆம் தேதி கோலாலம்பூர் உலக வர்த்தக மையத்தில் அனைத்துலக புத்தகக் கண்காட்சி சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் உமா பதிப்பகத்தின் சிறப்பு வெளியீடான உலகத் தமிழ்க் களஞ்சியம் தமிழ்மொழிப் பிரிவில் சிறந்த புத்தகமாகத் தேர்வு செய்யப்பட்டது. மலேசியப் புத்தக விருதளிப்பு விழாவில் தமிழ்மொழிப் பிரிவுக்கு விருது வழங்கப்பட்டது இதுவே முதன் முறையாகும். இவ்விருதினை உமா பதிப்பகத்தின் நிர்வாக இயக்குநர் சோ. சிவபாலன் பெற்றுக் கொண்டார்.

மலேசியப் புத்தக விருது என்பது மலேசியாவில் வெளியிடப்பட்ட அச்சு அல்லது மின்னியல் படைப்புகளின் உயர்தரம், கட்டமைப்பு, வெளியீடு ஆகியவற்றை மதிப்பிட்டு அங்கீகாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்விருதுக்காக மொத்தம் 293 படைப்புகள் பரிந்துரைக்கப்பட்டன. அவற்றுள் 78 புத்தகங்கள் இறுதிச் சுற்றுக்குத் தேர்வு பெற்றன. பின்னர் அதில் மிகச்சிறந்த 14 பிரிவுகளுக்கான புத்தகங்கள் தேர்வு செய்யப்பட்டன.



சிவபாலன் விருது பெறுகிறார்.

மலேசியப் புத்தக வெளியீட்டாளர் கூட்டமைப்பின் பதிவு செய்யப்பட்ட பதிப்பக நிறுவனத்தினர் மட்டுமே இணையம் வழி இவ்விருதுக்கான வெற்றியாளர்களைத் தேர்வு செய்தனர்.

உலகத் தமிழ்க் களஞ்சியம் 2018ஆம் ஆண்டு சென்னை அனைத்துலகப் புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்டது. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட உலகம் முழுவதையும் சேர்ந்த தமிழர்களின் பங்களிப்பு இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

இதில் மொத்தம் 3 தொகுதிகளைக் கொண்டிருக்கிறது. இத்தொகுதிகள் அனைத்தும் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட செய்திகளுடன் 2,140 பக்கங்களைக் கொண்டுள்ளன. உமா பதிப்பகத்தின் நிறுவனர் டத்தோ அ. சோதிநாதன் தலைமையில் இப்புத்தகம் உருவாக்கம் கண்டது.

பல துறைகளைச் சேர்ந்த அறிஞர்களுடன் இணைந்து 12 ஆண்டுகள் உழைப்பில் உலகத் தமிழ்க் களஞ்சியம் உருவாக்கப்பட்டது. பெரும் பொருட்செலவில் இக்களஞ்சியம் தயாரிக்கப்பட்டது. இதுபோன்ற சிறந்த தமிழ் நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருப்பது என்பது தமிழுக்கும் தமிழர்களுக்கும் மலேசியா வழங்கி இருக்கும் ஒரு மிகப்பெரிய அங்கீகாரமாகக் கருதப்படுகிறது.